ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

05.03.2026

1. அமிர்த கலச அருளமுது தன்னை
அன்னதான மகா சக்தியாக்கி
நேமம்பட சுப்பிரமண்யப் பெருமானும்
நிலமதனில் அரங்கனென்னை அவதாரமாக்கி

2. ஆக்கியே பிரணவக் குடில் படைத்து
அருளமுதை பிறவிப்பிணி அகற்றும்
ஆக்க சக்தியாக அருளி வர
அரங்கமகான் யானும் அருளாசிதனை

3. தன்னையே விசுவாவசு சால் திங்கள்
தக்க சூல குருவார அருளாசியாக
மண்ணுலகோர் நலம்பெற உரைப்பேன்
மாதரும பலமிக்க பிரணவக் குடில்தன்னை

4. குடில்தனை அணுகி வந்துமே
குமரா குருபரா குருநாதா என வேண்டி
நாடியே ஜோதி வழிபாடு செய்து
நம்பிக்கையோடு முழு சரணாகதி கொண்டு

5. கொண்டுமே அன்னதான சேவையில்
குறைவிலாப் பொருளுதவி தந்து
தொண்டு வழி உடல் உழைப்பு தந்தும்
தொண்டனாக ஞானிகளே ஏற்க

6. ஏற்கவே தொடர்ந்து வந்து
என் பீடம் தொடர்பை கூட்ட
அற்புதம் பல அவரவர் வாழ்வில்
அரங்கன் யானும் நிகழ்த்துவேன்

7. நிகழ்த்துவேன் உங்களின் வேண்டல்
நிறைவேற துணை நின்று
செகத்தில் அருள் பொருள் வளம்
சிந்தை தெளிவு திடம் ஞானம்பட

8. ஞானம்பட இந்தப் புவிதனில்
ஞானிகளை சேவித்து உணர்ந்து
தானவர்களும் ஞானி ஆகிட
தவராஜன் யானும் அருள்வேன்

9. அருளவே அறமே வழியென
அரங்கன் என் சன்மார்க்கத்தை
வரமாக ஏற்று வந்தவர்க்கு
வையகம் போற்ற நற்பேரு புகழ்

10. புகழ்பட அவர்களின் சந்ததிகளும்
புண்ணிய வழியில் நடக்க அருள்வேன்
மிகையான தரும வகை உதவிட
மேலவர்களான ஞானிகள் நாடி வந்து

11. வந்துமே ஆசியும் அனுகூலமும்
வற்றாத வரமும் தொடர்ந்தருள
இந்தப் பிறவியே கந்தன் பதம் பற்றி
இனி பிறவாப் பெரும்பேறு காண்பர்
குருவார அரங்கனென் அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி